# விளையாட்டுவழி வாசித்தல்:
# பிள்ளைகளுக்கு இன்பமான தமிழ் வாசிப்பு அனுபவங்களை உருவாக்குதல்




**Renu Siva**
Senior Librarian
National Library Board

# அமர்வின் நோக்கங்கள்

1. ஆரம்பக்கால வாசிப்பின் முக்கியத்துவம்
2. ஆரம்பக்கால எழுத்தறிவுத் திறன்கள்
3. விளையாட்டுவழி வாசித்தல்
4. வீட்டில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வழிமுறைகள்
5. நூல்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய உதவிக்குறிப்புகள்
6. வயதுக்கேற்ற தமிழ் நூல்கள்
7. பாலர் வாசிப்பு வழிகாட்டி






# ஆரம்பக்கால வாசிப்பின் முக்கியத்துவம்

மொழி வளர்ச்சியை ஆதரிக்கிறது.

சொற்களஞ்சியத்தை விரிவுபடுத்துகிறது.

கேட்கும் திறனையும் தொடர்புபடுத்தும் திறனையும் மேம்படுத்துகிறது.

கற்பனை, படைப்பாற்றல் ஆகியவற்றை வளர்க்கிறது.

தன்னம்பிக்கை, கருத்துகளை வெளிப்படுத்தும் திறன் ஆகியவற்றை அதிகரிக்கிறது.

பள்ளிக்குச் செல்லத் தயார்படுத்துகிறது.

# ஆரம்பக்கால எழுத்தறிவுத் திறன்கள்



# வாசிப்பு விளையாட்டிலிருந்து தொடங்குகிறது

**விளையாட்டு → மொழி → வாசிப்பு**

| விளையாட்டு நடவடிக்கை | உருவாகும் வாசிப்புத் திறன் |
|---|---|
| பாடல்கள் | • பேச்சொலியைப்பற்றிய விழிப்புணர்வு (Sound awareness) |
| பாவனை செய்தல் | • சொல்வளம் (Vocabulary) |
| கதை சொல்லுதல் | • நிரற்படுத்துதல் (Sequencing)<br>• கற்பனை ஆற்றல் (Imagination) |
| படங்களைப் பார்த்தல் | • உற்றுநோக்குதல் (Observation)<br>• புரிந்துணர்வு (Comprehension) |
| பாத்திரமேற்று நடித்தல் | • வெளிப்பாடு (Expression)<br>• கருத்துப்பரிமாற்றம் (Conversation) |

# விளையாட்டுவழி வாசித்தல்: படம் பார்த்துப் பேசுதல்

**படம் பார்த்துப் பேசுதல்** என்பது படங்களின் வாயிலாகப் பிள்ளைகளைக் கவனிக்கவும் சிந்திக்கவும் கலந்துரையாடவும் ஊக்குவிப்பதாகும். கதையை வாசிக்கும்போது பொருத்தமான இடங்களில் நிறுத்தி, பிள்ளைகளிடம் வினாக்கள் கேட்டு அவர்களின் சிந்தனையைத் தூண்டுவது அவசியம்

## பரிந்துரைக்கப்படும் வினாக்கள்:

- ❖ இந்தப் படத்தில் என்ன இருக்கிறது?
- ❖ இந்தப் படத்தில் என்ன நடக்கிறது?
- ❖ இந்தக் கதாபாத்திரம் வெளிப்படுத்தும் உணர்வு என்ன?
- ❖ நீ இந்தச் சூழலில் இருந்தால் என்ன செய்வாய்?
- ❖ அடுத்து என்ன நடக்கும் என்று நீ நினைக்கிறாய்?

## வினாக்களின் பயன்கள்:

- ❖ படங்களைப் பார்த்துப் பேசுவது பிள்ளையின் உற்றுக்கவனிக்கும் திறனையும் சொல்வளத்தையும் புரிந்துணர்வையும் ஒரே சமயத்தில் வளர்க்கிறது.
- ❖ இது வாசிப்பை மகிழ்ச்சியூட்டும் உரையாடலாக மாற்றுகிறது.

# விளையாட்டுவழி வாசித்தல்: சொல் விளையாட்டுகள்

மகிழ்ச்சியான சூழலில் பிள்ளைகளது சொல்வளத்தை மேம்படுத்துதல்

### 🔍 சொல்லைக் கண்டுபிடி

பிள்ளைகளிடம் குறிப்புகள் கொடுத்துச் சொல்லை ஊகிக்க ஊக்கப்படுத்துங்கள்.
*எ-டு: “ இதற்குச் சிறகு உண்டு, இது ஆகாயத்தில் பறக்கும் — இது என்ன?"*

### 🏠 பொருளைத் தேடு

பிள்ளைகளிடம் வீட்டின் பல்வேறு பகுதிகளைச் சுற்றிவந்து பொருளைக் கண்டுபிடிக்கச் சொல்லுங்கள்.

### 🏃 இயக்கத்திறனை ஊக்குவிக்கும் சொற்கள்

குதி, ஓடு, தட்டு, தூங்கு — போன்ற செயல்களைப் பிள்ளைகளைச் செய்யச் சொல்லுங்கள். இது பிள்ளைகளின் இயக்கத்திறன்களை வளர்க்கும்.

### 📦 வகைப்படுத்துதல்

விலங்குகள், உணவுகள், நிறங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் வகைப்படுத்தச் சொல்லுங்கள். இது சிந்தனைத்திறனைச் செம்மைப்படுத்தும்.

# விளையாட்டுவழி வாசித்தல்: பாத்திரமேற்று விளையாடுதல்

### பாத்திரமேற்று விளையாடுதல்

- நம்பிக்கையுடன் பேசவும் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளவும் உதவுகிறது.
- உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு வெளிப்படுத்த உதவுகிறது.
- கேட்ட கதைகளை மீண்டும் சொல்ல உதவுகிறது.
- கதாபாத்திரங்களின் நோக்கங்களைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

### பெற்றோருக்குரிய குறிப்புகள்

- எளிய சொற்களைப் பயன்படுத்துங்கள்.
- பிள்ளைகளிடம் தங்களது கருத்துகளைச் சொல்ல ஊக்கப்படுத்துங்கள்.— தவறு செய்தாலும் பரவாயில்லை.
- பிள்ளைகளே விளையாட்டை வழிநடத்த அனுமதியுங்கள்.
- ஒவ்வொரு தவற்றையும் உடனே திருத்த வேண்டாம் — பிள்ளைகள் இயல்பாகக் கற்றுக்கொள்வது முக்கியம்.



# வீட்டில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல்

### தினமும் 10–15 நிமிடங்கள்

நீண்ட நேரம் வாசிப்பதை விட, தினசரி குறுகிய நேர வாசிப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

### தூங்குவதற்கு முன் வாசியுங்கள்

இரவு நேர வாசிப்பு, பிள்ளைகளுக்கு அமைதியான சூழலையும் கதை கேட்கும் பழக்கத்தையும் ஏற்படுத்தித் தருகிறது.

### நூலகத்திற்குச் செல்லுங்கள்

புதிய நூல்களைக் கண்டுபிடிக்கவும் தமிழ் நூல்களை இலவசமாகப் படிக்கவும் சிறந்த இடம்.

### குடும்பமாகச் சேர்ந்து வாசியுங்கள்

பெற்றோர் வாசிக்கும்போது பிள்ளைகளும் வாசிப்பை மதிக்கத் தொடங்குவார்கள்.

**முக்கிய நினைவூட்டல்:** நூல்களைப் பிள்ளைகளின் கண்களுக்குத் தென்படும் இடத்தில் வைக்கவும். ஒரே நூலை மீண்டும் வாசிப்பது நல்லது — மீண்டும் மீண்டும் வாசிப்பது கற்றலை உறுதிப்படுத்துகிறது!

# வாசிப்புக்குரிய இடம்

வீட்டில் ஒரு சிறிய வாசிப்பு மூலையை உருவாக்குவதன்வழி வாசிப்பின் முக்கியத்துவத்தைப் பிள்ளைகளுக்கு உணர்த்தலாம்.









### 🛋️ வசதியான இடம்

பிள்ளைகளுடன் சேர்ந்து வாசிப்பு மூலையை அலங்கரிக்கவும்.

### 📚 புத்தகப் பேழை

நூல்களை எளிதாக எடுக்கும் உயரத்தில் வைக்கவும்.

### 💡 ஏதுவான சூழல்

வாசிப்பதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்திக்கொள்ளவும் (எ.டு: போதிய வெளிச்சம் )

# பொதுவான சவால்களும் நடைமுறை பரிந்துரைகளும்

## "என் பிள்ளைக்குத் தமிழில் வாசிக்க விருப்பமில்லை"

| சவால் | பரிந்துரைகள் |
| --- | --- |
| ஆங்கிலத்தில் அதிக விருப்பம் | இருமொழி நூல், அனுபவத்திற்கு உட்பட்ட கருப்பொருளைக் கொண்ட நூல் |
| விரைவில் கவனம் சிதறுதல் | குறைந்த பக்கங்களைக்கொண்ட நூல்களைப் பயன்படுத்துங்கள் |
| வாசிப்பை ஒரு பாடமாக மட்டும் கருதுதல் | விளையாட்டுகள், பாடல்கள், கதைகள் போன்ற ஆர்வமூட்டும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தவும் |
| வாசிக்க மறுத்தல் | பிள்ளைகள் விரும்பும் தலைப்புகளைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பளிக்கவும் |

நினைவிற்கொள்ளுங்கள்: ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமானவர்; பொறுமையும் அன்பும் கனிவும் கொண்டவர் சிறந்த ஆசிரியர்கள்!

## ஏற்புடைய தமிழ் நூல்களைத் தேர்ந்தெடுத்தல்

நூலைத் தேர்ந்தெடுக்கும்போது பிள்ளையின் வயது, ஆர்வம், மொழித்திறன் ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ளவும்.

### ✅ கவனிக்க வேண்டியவை

- பெரிய, வண்ணமயமான படங்கள் கொண்ட நூல்கள்
- எளிய சொற்கள் இடம்பெறும் நூல்கள்
- பிள்ளைகளின் அனுபவங்களுக்கு உட்பட்ட கருப்பொருள்கள்
- நகைச்சுவையும் கற்பனையும் நிறைந்த நூல்கள்
- ஒலிநயம், திரும்பத்திரும்ப ஒலிக்கும் சொல் அல்லது தொடர்

### ❌ தவிர்க்க வேண்டியவை


- அதிகச் சொல் எண்ணிக்கையும் குறைந்த படங்களையும் கொண்ட நூல்களைத் தேர்ந்தெடுப்பது
- பிள்ளையின் மொழித்திறனுக்கு அப்பாற்பட்ட கடினமான நூல்களைத் தேர்ந்தெடுப்பது
- வாசிப்பை மதிப்பிடுவது

ஒரு பிள்ளை திரும்பத்திரும்ப வாசிக்க விரும்பும் நூலே சிறந்த நூல்!

# கருத்தியல் நூல்கள் — அடிப்படைக் கற்றல்


- எழுத்துகளும் எண்களும்
- உணர்வுகளும் எண்ணங்களும்
- வடிவங்களும் நிறங்களும்
- விலங்குகளும் வாழ்விடங்களும்
- அருஞ்சொற்களும் எதிர்ச்சொற்களும்













# மழலைப் பாடல்களும் எளிய கவிதைகளும்

பாடல்களும் கவிதைகளும் பிள்ளையின் பேச்சொலிப்பற்றிய விழிப்புணர்வை இயல்பாக வளர்க்கின்றன. தாளம், ஒலிநயம், திரும்பத்திரும்ப ஒலிக்கும் சொல்/தொடர்

















குளிக்கும் நேரத்திலும், பயணத்திலும், விளையாடும் நேரத்திலும் பாடல்களைப் பாடுங்கள் — எங்கும் வாசிப்பு மலரட்டும்!


# இருமொழி நூல்கள்


NEELU'S BIG BOX
நீலுவின் பெரிய பெட்டி
STORY Nandini Nayar
கதை நந்தினி நாயர்
PICTURES Shreya Sen
படங்கள் ஷ்ரேயா சென்
TRANSLATION Jeeva Raghunath
மொழிபெயர்ப்பு ஜீவா ரகுநாத்


Where Shall I Paint ?
எங்கே நான் வரையலாம்?
STORY Nandini Nayar
PICTURES Anupama Iyer
கதை நந்தினி நாயர்
சித்திரம் அனுபமா ஐயர்
NSLATION Jeeva Raghunath
ாழிபெயர்ப்பு ஜீவா ரகுநாத்

# எளிய நூல்கள்


சொல்வண்ணம்
1D
பாலர் வாசகத் தொடர்



இது பேருந்து.


புத்தகம்
ஒரு


புத்தகம் ஒரு மரம்
அதன் கிளைகளை ஏறி
உலகத்தை சுற்றிப் பார்க்கலாம்.


பச்சைக்கிளி
முத்துச்சரம்
பிரேமா கோவிந்த்


சுவரில்
சித்திரங்கள்



தாத்தாவின்
பிரேமா கோவிந்த்



அரிமா
வண்ணக்
குமிழி


# எளிய கதைகள்




# சற்றுக் கடினமான கதைகள்



# புனைவு அல்லாதவை





# சஞ்சிகைகள்




# தொடர் நூல்கள்


வரதனும்
இயந்திர நண்பனும்
பிரேமா கோவிந்த்


வரதனும்
மறைந்த கணினியும்
பிரேமா கோவிந்த்


கீர்த்தியும்
ரகசிய ஓலையும்
பிரேமா கோவிந்த்


மீன்களின்
கண்காட்சி


மீண்டும்
மீன்களின்
கண்காட்சி
கதை டேவிட் சியால்
தமிழாக்கம் பிரேமா கோவிந்த்




GO.gov.sg

https://go.gov.sg/tamil-early-reading-guide







# நூலகத்தில் கதை நேரம் — மாதாந்திர நிகழ்வு

ஆண்டு முழுவதும் பிள்ளைகளும் பெற்றோரும் ஒன்றாகப் பங்கேற்க உதவும் மாதாந்திரக் கதை நேரம். ஒவ்வொரு மாதமும் புதிய கதைகள், புதிய அனுபவங்கள்!







இவை பிள்ளைகளின் தமிழ்மொழித் திறனை வளர்க்கவும், கதை கேட்கும் ஆர்வத்தைத் தூண்டவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

https://go.gov.sg/tamil-storytelling-libraries

உங்கள் அருகிலுள்ள நூலகத்தில் அடுத்த கதை நேர நிகழ்வில் கலந்துகொள்ளுங்கள்!

# இன்றே தொடங்குங்கள்!

ஒரு நூல், ஒரு கதை, ஓர் அன்பான தருணம்.

### 🌟 இன்றிரவு

இரவில் தூங்குவதற்குமுன் ஒரு தமிழ்க் கதையைச் சொல்லுங்கள்

### 📅 இந்த வாரம்

நூலகம் சென்று ஒரு தமிழ் நூலை இரவல் பெறுங்கள்

### 🏠 இந்த மாதம்

வீட்டில் ஒரு சிறிய வாசிப்பு மூலையை உருவாக்குங்கள்






உங்கள் வினாக்களை
**readtamil@nlb.gov.sg** என்ற
மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்.

https://go.gov.sg/tamil-library-serv
ices-

எங்கள் நிகழ்ச்சிகள், சேவைகள் பற்றிய
தகவல்களுக்கு எங்கள் முகநூல்
(Facebook) குழுவில் இணையுங்கள்.